# அரையாண்டுத் தேர்வு

## மகிழ்ச்சி - ஐந்தாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 50 காலம் : 2½ மணி

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. சார்பெழுத்துகள் ______________ வகைப்படும்.

   அ. 12 ஆ. 10 இ. 216 ஈ. 07

2. ஓவியத்தைக் குறிக்கும் வேறு சொல் ______________.

   அ. வண்ணம் ஆ. சிற்பம் இ. சித்திரம் ஈ. கரி

3. "இனிப்பு வழங்கினான் " என்பது ______________.

   அ. பண்பாகு பெயர் ஆ. இடவாகு பெயர்

   இ. காலவாகு பெயர் ஈ. பொருளாகு பெயர்

4. "நான்மை" என்பதன் பொருள்______________.

   அ. நான்கு ஆ. மூன்று

   இ. ஐந்து ஈ. இரண்டு

5. ______________ என்பது விவசாயத்தின் முக்கிய நிலையாகும்.

   அ. பயிரிடுதல் ஆ. நீர் பாய்ச்சுதல்

   இ. அறுவடை ஈ. களை நீக்கம்

**II. பொருள் எழுதுக.** **5 x 1 = 5**

1. கீர்த்தி - ________________
2. அறம் - ________________
3. சிறுமை - ________________
4. போலி - ________________
5. ஆசாரம் - ________________

**III. எதிர்ச்சொல் எழுதுக.** 5 x 1 = 5

1. தோல்வி x ____________
2. இன்பம் x ____________
3. கனி x ____________
4. கிழக்கு x ____________
5. இம்மை x ____________

**IV. பிரித்து எழுதுக.** 5 x 1 = 5

1. பொறுப்பற்ற – ____________
2. முட்புதர்கள் – ____________
3. முகனமர்ந்து – ____________
4. அணியல்ல – ____________
5. கவர்ந்தற்று – ____________

**V. பொருத்துக.** 5 x 1 = 5

| | | |
|---|---|---|
| 1. | இந்தியா | பொருளாகு பெயர் |
| 2. | தாய்லாந்து | பண்பாகு பெயர் |
| 3. | தாமரை மலர்ந்தது | செப்டம்பர் 5 |
| 4. | மஞ்சள் பூசினாள் | சினையாகு பெயர் |
| 5. | வெற்றிலை நட்டான் | ஜனவரி 16 |

**VI. சிறுவினாக்கள்: (எவையேனும் ஐந்திற்கு மட்டும் விடையளிக்கவும்)** 5 x 2 = 10

1. குற்றால நாட்டில் அஞ்சி ஓடுவது எது?
2. மூடத்தனம் எது? மூலத்தனம் எது?
3. இந்தியாவில் ஆசிரியர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது? ஏன்?
4. சார்பெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. ஒருவனுக்குரிய சிறந்த அணிகலன் எது?
6. மாணவர்கள் எங்கு களப்பயணம் செய்தனர்?
7. ஆகுபெயர் என்றால் என்ன?
8. சிற்பி சிலையைச் செதுக்க எதைத் தேடினார்?
9. “கற்றவர் கண்ட நெறி” என ஆசாரக்கோவை கூறுவது என்ன?
10. இயற்கை விவசாயத்திற்கேற்ற பயிர் வகைகளில் ஏதேனும் எட்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

**VII. பெருவினாக்கள்: (எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்)** 2 x 5 = 10

1. “ஓடக் காண்பது பூம்புனல்” எனத் தொடங்கும் திருக்குற்றாலக் குறவஞ்சி பாடலை எழுதுக.
2. 2220 ஆம் ஆண்டில் மனிதர்களின் உருமாற்றத்திற்கான காரணம் என்ன?
3. “சிறுமையுள் நீங்கிய” மற்றும் “இனிய உளவாக” எனத் தொடங்கும் குறள்களை அடி பிறழாமல் எழுதுக.
4. கீழ்க்கண்ட சொற்றொடர்களின் ஆகுபெயர் வகைகளை எழுதுக.
   அ) மல்லிகை சூடினாள்.
   ஆ) முறுக்கு உண்டான்.
   இ) ஊர் கூடியது.
   ஈ) ஆதிரையில் பிறந்தாள்.
   உ) கீரை இங்கே வா.
5. உழவுத் தொழிலின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் என்பதை எழுதுக.

**VIII. தெரு மின்விளக்கு வசதி வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.** 1 x 5 = 5